பக்கங்கள்:-17

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 04 | திங்கட்கிழமை | 18.03.2024 | அதிர்வு 230

# இரண்டு சிறுவர்கள் ஆற்றில் மூழ்கிப் பலி

## பெற்றோர் கண் முன்னால் சோகம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஆற்றில் மூழ்கி இரண்டு சிறுவர்கள் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

காலி, யக்கலமுல்ல 06▶



## வெடுக்குநாறிமலை அராஜகத்துக்கு எதிராக

# யாழ். பல்கலை முன்றிலில் நாளை பெரும் போராட்டம்

## மாணவர் ஒன்றியம் அழைப்பு

தமிழர் தாயகத்தில் தொல்லியல் என்ற போர்வையிலான பண்பாட்டு அழிப்பையும் சிங்கள - பௌத்தமயமாக்கலையும் உடன் நிறுத்துமாறு கோரியும், வெடுக்குநாறிமலை ஆலயத்தில் நெடுங்கேணிப் பொலிஸாரால் திட்டமிட்டுக் கைது செய்யப்பட்டவர்களை உடன் விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியும் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்றிலில் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. 06▶

# குடும்பப் பெண் சடலமாக மீட்பு!

## பொலிஸார் தீவிர விசாரணை



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் குடும்பப் பெண்ணொருவர் நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அயல் வீட்டில் தண்ணீர் வாங்கிக் குடித்துவிட்டு படலைக்கு வெளியே வந்த மேற்படி குடும்பப் பெண் கீழே மயங்கி 06▶




வெடுக்குநாறிமலை விவகாரம் நாளை வவுனியா நீதிமன்றுக்கு வருகின்றது.

அதற்கு முன்னர் இன்று மாலையில் இவ் விடயத்தை ஒட்டி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்துப் பேசுவதற்குத் தமிழ்த் தேசியக் கட்சிகளின் எம்.பிக்கள் தீர்மானித்திருக்கின்றனர். எனினும் நேற்று இரவு வரை இது தொடர்பான சந்திப்புக்கு அவர்களுக்குப் பச்சைக் கொடி காட்டப்படவில்லை என்று அறிய வந்தது.

தப்பித் தவறி சந்திப்பதற்கு வாய்ப்புக் 06▶

# நோர்வூட் குடி தண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு!








(பொகவந்தலாவ)

நோர்வூட் பகுதியில் நீண்டகாலமாகக் காணப்பட்டு வந்த குடி தண்ணீர்ப் பிரச்சினைக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு, சமுதாய அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானால் தீர்வு பெற்றுகொடுக்கப்படுகின்றது என்று அமைச்சின் பிரத்தியேகச் செயலாளர் அருஜீன் ஜெயராஜ் தெரிவித்தார்.

நோர்வூட் தொண்டமான் விளையாட்டு மைதான மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நோர்வூட் வர்த்தக நலன்புரி சங்கத்தால் மக்கள் சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் அமைச்சின் பிரத்தியேகச் செயலாளர் அருஜீன் ஜெயராஜ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான கணபதி கனகராஜ், முன்னாள் நோர்வூட் பிரதேச சபையின் தலைவர் ரவி குழந்தை வேல், கிராம உத்தியோகத்தர், சுகாதார பரிசோதகர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது இந்தப்பிரதேசம் இதுவரைகாலமும் பயன்படுத்தி வந்த நீரைப் போத்தல்களில் கொண்டுவந்து சாட்சியாக முன்வைத்ததோடு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் மக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இதனை தொடர்ந்து நோர்வூட் பகுதியில் நீண்டகாலமாக காணப்படும் குடி தண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வாக இந்த வருட இறுதிக்குள் 450 மில்லியன் ரூபா செலவில் இந்தப் பிரதேசத்துக்குக் குடி தண்ணீர் வசதியை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கேசல்கமுவ ஓயாவின் நீரையும் மஸ்கெலியா பிரதேசத்தில் உள்ள நீரையும் கொண்டு நோர்வூட் பகுதியில் நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நீர்சேகரிப்பு நிலையம் என்பன அமைக்கப்படவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# அநுராதபுரத்தில் 28 வீதம் மாணவர்கள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிப்பு

அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களில் 28 சத வீதமானவர்கள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால் அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்தாமல் இருக்கின்றனர் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 16 சத வீதமான பாடசாலை மாணவர்கள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனப் பிரித்தானிய வைத்திய அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களில் பெரும்பாலான மாணவர்கள் அநுராதபுரம் பிரதேசத்தில் வசிப்பவர்கள் என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்போது காணப்படும் பொருளாதாரப் பிரச்சினையால் குடும்பங்களில் ஏற்படும் வருமானமின்மையே



இதற்கு முக்கிய காரணம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் பாடசாலை மாணவர்களின் சுறுசுறுப்புத் தன்மையும் குறைவடைந்து வருவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

# போதைப்பொருள் குற்றச்சாட்டிற்காக கைதான இளைஞன் சிறையில் சாவு!

போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 19 வயதுடைய இளைஞன் ஒருவர் சிறைச்சாலையில் உயிரிழந்துள்ளார்.

கடந்த 6 ஆம் திகதி கடுவெல பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இந்த இளைஞன், மறுநாள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்த நிலையில், அந்த இளைஞர் கடந்த 16ஆம் திகதி உயிரிழந்துள்ளார் எனச் சிறைச்சாலை அதிகாரிகள் அவரது பெற்றோரிடம் தெரிவித்துள்ளனர்.

இந்த இளைஞன் சுகவீனமுற்ற நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் அவர் உயிரிழந்தார் எனச்சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் காமினி பி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இருப்பினும், மரணத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.



# ஐஸூடன் ‘கொண்ட சுது’ பொலிஸிடம் சிக்கினார்!



ஐஸ் போதைப்பொருளுடன் “கொண்ட சுது” என்ற போதைப்பொருள் வியாபாரியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவரிடமிருந்து 12 கிராம் 805 மில்லி கிராம் ஐஸ் கைப்பற்றப்பட்டது.

மேலும் சந்தேக நபரிடமிருந்து இலத்திரனியல் தராசு மற்றும் இரண்டு வாள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேல்மாகாண ஊழல் ஒழிப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டார்.

# இன்று வெப்பம் கூடும்



நாட்டின் பல பகுதிகளில் வெப்பநிலை இன்று திங்கட்கிழமை கவனத்துக்குரிய மட்டத்துக்கு மேலும் அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, வடமேற்கு, வடமத்திய, கிழக்கு, மேல் மாகாணங்களிலும் மொனராகலை, மன்னார், இரத்தினபுரி மற்றும் வவுனியா மாவட்டங்களின் சில இடங்களில் மனித உடலால் உணரப்படும் வெப்பம் கவனத்துக்குரிய அளவில் இருக்கும் எனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, போதியளவு தண்ணீர் அருந்துதல், நிழலான பகுதிகளில் இயன்றவரை ஓய்வெடுத்தல், கடுமையான வெளிச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துதல் போன்ற சுகாதார ஆலோசனைகளை மக்கள் பின்பற்ற வேண்டும் எனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# வவுனியாவில் ரயில் மோதி குடும்பஸ்தர் ஒருவர் மரணம்

(கே.வசந்தன்)

வவுனியாவில் ரயில் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து அனுராதபுரம் நோக்கி நேற்று மாலை சென்ற கடுகதி ரயில் வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் பயணித்தபோது ரயில் கடவைக்குள் நுழைந்த ஒருவருடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் வவுனியா, தேக்கவத்தைப் பகுதியைச் சேர்ந்த 65 வயதுடைய ஜெயக்கொடி ஆராச்சி ராஜரட்ண என்பவரே மரணமடைந்தவராவார். சடலம் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# இன, மத வெறிபிடித்தவர்களுக்கு எங்கள் கூட்டணியில் இடமில்லை

## சஜித்தின் கட்சி திட்டவட்டம்

இனவாதிகள் மற்றும் மதவாதிகளுக்கு ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இடமில்லை என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“இந்த நாட்டில் பரந்துபட்ட அரசியல் கூட்டணியை உருவாக்குவோம். பலர் எம்முடன் இணைந்துள்ளனர். அனைத்து கட்சிகளில் இருந்தும் வருகின்றனர். சிவில் அமைப்புகளும் இணைந்துள்ளன. மேலும் பல தரப்பினரும் எம்முடன் பேச்சு நடத்தி வருகின்றனர்.

ஊழல்வாதிகள், மோசடிக்காரர்கள், இனவாதிகள் மற்றும் மதவாதிகளுக்குக் கூட்டணியில் இடமில்லை. இந்நாட்டில் உருவான பாரிய கூட்டணியாக எமது கூட்டணி அமையும்.” – என்றார்.



# பொதுத் தேர்தலின் பின்னர் எவராலும் தனித்து ஆட்சி அமைக்கவே முடியாது

## அடித்துக் கூறுகின்றார் சரத் பொன்சேகா



நாட்டில் தற்போது நிலவும் அரசியல் சூழ்நிலையின் படி எதிர்வரும் தேர்தலில் எவராலும் தனித்து ஆட்சி அமைக்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவ தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கட்சி சார்பற்ற அமைப்பினால் கண்டி ஜோர்ஜ் ஈ டி சில்வா பூங்கா முன்பாக “மக்கள் புரட்சியை நோக்கி நிராயுதபாணியான கட்சி சார்பற்ற போராட்டம்“ என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட பிரச்சாரத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்வரும் தேர்தலில் உங்கள் வாக்குகளைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துங்கள். இந்த நாட்டை அழித்த பொறுப்பற்ற அரசியல்வாதிகளிடம் ஏமாறாமல், அரசியல்வாதிகளின் கடந்த கால தவறுகளை ஆராய்ந்து, உங்கள் வாக்குகளைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துங்கள்.

இந்த நாட்டில் நிலவும் சீர்கெட்ட அரசியல் கலாசாரம் மற்றும் தொலைநோக்குப் பார்வையின்மை குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

அரசியல்வாதிகளிடம் ஏமாறாமல் நாட்டின் எதிர்காலத்தை முன்னெடுத்துச் செல்பவர்களுக்காக உங்கள் வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும்.

எதிர்காலச் சந்ததியினருக்காக நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு நாட்டின் மீது உணர்வுள்ள மக்களின் இதயத்துடிப்பைப் புரிந்துகொள்ளக்கூடிய, எதிர்கால நெருக்கடிகளைப் புரிந்துகொள்ளக்கூடிய, அரசியல்வாதிகளின் வாக்குறுதிகளை நம்பி ஏமாறாமல் ஆட்சியாளர்களை நியமிக்க வேண்டும்.

நாட்டில் நாடாளுமன்றமும் ஜனநாயகமும் இருக்க வேண்டும். அரசியல்வாதிகள் கொள்கையளவில் செயற்பட வேண்டும். தலையெடுக்கும் குப்பைகளை சேகரித்து அரசியலுக்குக் கொண்டு சென்றால் நாடு மீண்டும் சிக்கலில் மாட்டிக் கொள்ளும்.

நாட்டு மக்கள் போராட்டத்தை முன்னெடுத்து, மாற்றத்தை கோரினர். ஆனால் பெரும்பான்மையான மக்களால் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை தற்போது கற்பனை செய்து பார்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. - எனப் பொன்சேகா மேலும் தெரிவித்தார்.

# புத்தளம் விபத்தில் குடும்பஸ்தர் சாவு



(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் - கரம்பை பகுதியில் நேற்று முந்தினம் இரவு இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாலாவி - கரம்பையைச் சேர்ந்த முத்து தம்பி இராமநாதன் (வயது 42) எனும் இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் இடம்பெற்ற போது உயிரிழந்த

இந்த நபர் இரவு நேர சாப்பாடு எடுப்பதற்காக மோட்டார் சைக்கிளில் கரம்பை உள்வீதியில் இருந்து பிரதான வீதிக்கு சென்ற போது பாலாவியிலிருந்து நுரைச்சோலை நோக்கிப் பயணம் செய்த லொறியொன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதி இந்த விபத்து ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த நபரை அங்கிருந்தவர்கள் உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்த போதிலும், அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

புத்தளம் பகுதிக்கு பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி தேசமான்ய பதுர்தீன் முஹம்மது ஹிசாம் மரண விசாரணையை நடத்தினார்.

அந்த நபரின் தலையில் ஏற்பட்ட பலத்த காயம் காரணமாக இந்த மரணம் நிகழ்ந்துள்ளது எனத் தீர்ப்பு வழங்கி, சடலத்தை அவரது மனைவியிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் நுரைச்சோலைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வெளிநாட்டுப் பெண் யானை தாக்கிச் சாவு

## பொத்துவிலில் சம்பவம்



(காரைதீவு நிருபர் சகா)

இத்தாலி நாட்டு சுற்றுலாப் பெண் பயணி ஒருவர் பொத்துவில் - கோமாரியில் வைத்து யானையால் அடித்துக் கொல்லப்பட்டிருக்கின்றார்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் கோமாரி - களுகொல்ல எனும் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

அவர் சகபாடிகளுடன் மோட்டார் சைக்கிளில் கோமாரி கடலை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த வேளை திடீரென்று வீதியால் வந்த யானை அவரை இழுத்து அடித்துக் கொன்றது. ஏனையவர்கள் தப்பியோடி விட்டார்கள்.

அவரது சடலம், பிரேத பரிசோதனைக்காகப் பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

52 வயது மதிக்கத்தக்க வெள்ளைக்கார பெண்ணே சம்பவத்தில் உயிரிழந்தார்.

# போலிக் கடவுச்சீட்டு வழங்கிய இரண்டு அதிகாரிகள் கைது!

இரண்டு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் நாட்டை விட்டுத் தப்பிச் செல்வதற்கு கடவுச்சீட்டு ஏற்பாடு செய்ய உதவியமைக்காகக் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் ஒருவரும், முன்னாள் பிரதிக் கட்டுப்பாட்டாளர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரில் ஒருவர் வவுனியா நீதிவான் நீதிமன்றிலும் மற்றைய சந்தேகநபர் கடுவலை நீதிவான் நீதிமன்றத்திலும் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொஹான் பிரேமரத்னவின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சந்தேகநபரான குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பிரதிக் கட்டுப்பாட்டாளரால், ஹீனட்டிய மகேஷ் என்று அழைக்கப்படும் நுரேஷ் சுபுன் தயாரத்ன என்ற ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிக்கு போலிக் கடவுச்சீட்டு தயார் செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

மாணிக்குகே தினேஷ் சில்வா என்ற போலிப் பெயரை உள்ளிட்டு போலி கடவுச்சீட்டு இலக்கம் மற்றும் போலி அடையாள அட்டை இலக்கத்தை உள்ளிட்டு ஹீனட்டிய மகேஷ் என்பவருக்கு கடவுச்சீட்டை தயார் செய்தார் எனக் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் பிரதி கட்டுப்பாட்டாளர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பிரதி கட்டுப்பாட்டாளர் ஸ்ரீஜயவர்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் முன்னாள் பிரதிக் கட்டுப்பாட்டாளர் ஒருவர், மத்துகம ஷான் என அழைக்கப்படும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான ஷான் அரோஷ லியனகேவுக்கு போலி கடவுச்சீட்டை தயார் செய்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தொடங்கொடலியனகே ராஜேஷ் குமார ஜயசிங்க என்ற போலிப் பெயரைப் பயன்படுத்தி முன்னாள் பிரதிக் கட்டுப்பாட்டாளர் போலி கடவுச்சீட்டை தயாரித்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரான குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் முன்னாள் பிரதிக் கட்டுப்பாட்டாளர், தற்போது ஓய்வூதிய திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளராகக் கடமையாற்றி வருகிறார் என்று குற்றப் புலனாய்வு திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# இலங்கையில் நாளொன்றுக்கு ஆயிரம் கருக்கலைப்புகளாம்!

## நிபுணத்துவ மருத்துவர் சமால் சஞ்சீவ தகவல்

இலங்கையில் நாளொன்றுக்கு சுமார் ஆயிரம் கருக்கலைப்புகள் இடம்பெறுகின்றன என்று பிரித்தானியாவின் லேன்ட்செட் மருத்துவ சஞ்சிகை அதிர்ச்சித் தகவல் வெளியிட்டுள்ளது.

நாட்டில் சமூக பாதுகாப்பு நிலைமை வீழ்ச்சியடைந்த காரணத்தால் இவ்வாறு அதிகளவு கருக்கலைப்புகள் பதிவாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலை பிள்ளைகள், பல்கலைக்கழக மாணவியர், திருமணமாகாத பெண்கள், திருமணமான பெண்கள் உள்ளிட்டவர்கள் இவ்வாறு கருக்கலைப்பு செய்து கொள்கின்றனர் என ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது என்று நிபுணத்துவ மருத்துவர் ஜீ.ஜீ சமால் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

நாட்டில் சமூகப் பாதுகாப்பு நிலைமைகளில் காணப்படும் குறைபாடு காரணமாக பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாகும் சிறுமியரின் எண்ணிக்கை அதிகம் என்று தெரிவித்துள்ளார்.

பால்வினை நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பால்வினை நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கக் கூடிய மருத்துவர்கள் பலர் வெளிநாடு சென்றுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சமூகப் பொருளாதார காரணிகளால் இவ்வாறு அவர்க வெளிநாடு சென்றுள்ளனர் எனவும், இதனால் பால்வினை நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதில் சவல்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தூக்கில் தொங்கிய ஆண் வைத்தியசாலையில் சாவு

## இருபாலையில் சம்பவம்

யாழ்ப்பாணத்தில் நேற்று தவறான முடிவெடுத்துத் தூக்கில் தொங்கிய ஆணொருவர், வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டவேளை உயிரிழந்துள்ளார்.

இருபாலை கிழக்கு பகுதியைச்சேர்ந்த சிற்றம்பலம் பாஸ்கரன் (வயது 61) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், மேற்படி நபர் வீட்டுக்கு முன்னால் உள்ள வேப்பமரத்தில் நேற்று தூக்கில் தொங்கியுள்ளார். இதன்போது அவரை மீட்ட உறவினர்கள் கோப்பாய் வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.

அங்கு சேர்ப்பிக்கப்பட்ட மேற்படி நபர் சில மணி நேரங்களில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காகச் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிடைத்தாலும், இவ்விடயத்தை இப்போதைய நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீதி, நேர்மையுடனுமோ அல்லது தமிழர் பக்கத்தில் உள்ள நியாயங்களைச் சீர்தூக்கிப் பார்த்தோ, உறுதியாகச் செயல்படுவார் என்றோ, விரைந்து நடவடிக்கை எடுப்பார் என்றோ நம்புவதற்குச் சாத்தியம் இருப்பதாகத் தெரியவில்லை.

இதே போன்ற ஒரு விடயத்துக்காக சுமார் ஓர் ஆண்டுக்கு முன்னர் தமிழர் தரப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் முறைப்பாடு செய்தமை வாசகர்களுக்கு நினைவில் இருக்கலாம்.

அது முல்லைத்தீவு மாவட்டம் குருந்தூர் மலையைச் சுற்றியுள்ள 300 ஏக்கர் வயல் காணியை தொல்பொருள் திணைக்களம் அத்துமீறி ஆக்கிரமித்த விவகாரம். அதை ஒட்டிய கூட்டத்தில் தமிழர் தரப்பின் நியாய வாதங்களை கவனத்தில் எடுத்து, தொல்பொருள் திணைக்கள ஆணையாளர் மீது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எரிந்து விழுந்தமையும் –

அதனால் அந்த ஆணையாளர் இரண்டொரு நாள்களில் தமது பதவியை ராஜினாமாச் செய்து விட்டு விலகியமையும் –

அது தென்னிலங்கையில் பேரினவாதிகளினால் பெரிய விவகாரமாக, பூதாகரமாக்கப்பட்டு, தூக்கிப் பிடிக்கப்பட்டு, ஜனாதிபதி ரணிலுக்கு எதிரான பிரசாரமாக முன்னெடுக்கப்பட்டமையும் –

தெரிந்த விவகாரங்கள்தாம்.

ஆறு மாதங்களில் நடைபெறவிருக்கும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராகும் ரணில் விக்கிரமசிங்க, அதற்காகப் பேரினவாதிகளின் வாக்குகளிலும் ஆதரவிலும் தங்கி இருக்கும் சூழ்நிலையில் – இந்தச் சமயத்தில் – பேரினவாதிகளைப் பகைத்துக் கொள்ளும் விதத்திலான நடவடிக்கைகளை எடுக்க கடைசிவரை முன்வர மாட்டார் என்பது திண்ணம்.

ஆகவே, வெடுக்குநாறிமலை விடயத்தில் நீதியும், நியாயமும், உண்மையும் தமிழர் பக்கத்தில் இருந்தாலும், அதற்கு ஆதரவான நிலைப்பாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடன் எடுத்து, நியாயமாக நடப்பார் என்று நம்புவதற்கு இடமில்லை.

அதுதான் யதார்த்த நிலைமை.

நாளைக்கு வவுனியா நீதிமன்றத்தில் இந்த வழக்கு எடுக்கப்படும் அதே நேரத்தில், நாடாளுமன்றத்தில் சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையும் வருகின்றது. அந்தப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொள்ள வேண்டிய கட்டாயம் காரணமாக, இந்த வழக்குக்கு ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் வருகை தர மாட்டார். இந்த வழக்கில் வெடுக்குநாறிமலை சிவன் ஆலயப் பூசகர் மற்றும் உதவியாளர் ஆகியோர் சார்பிலான தமது சமர்ப்பணங்களை சுமந்திரன் ஏற்கனவே நீதிமன்றத்தில் முன்வைத்து விட்டமையால், நாளை வழக்கை சிரேஷ்ட சட்டத்தரணி என்.சிறீகாந்தாவே முன்நின்று நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கிடையில் –

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்து வரும் நாள்களில் – பெரும்பாலும் 20 ஆம் திகதி – திடீரென ஒரு நாள் புதுடில்லி விசிட் ஒன்றைத் திடுதிப்பென மேற்கொள்ளவிருக்கின்றார் என ஒரு வட்டாரம் தெரிவித்தது. ஆனால் அதனை உறுதி செய்ய முடியவில்லை. அந்தத் தகவலில் உண்மை இருந்தால், அது பற்றிய விடயங்களை இன்று உறுதிப்படுத்தலாம் என எதிர்பார்க்கிறேன்.

கடைசியாக ஒரு கொசுறுத் தகவல்:–

குத்துவிளக்குக் கூட்டணியின் ஒரு கட்சியின் செயலாளர் குறித்து சில நாள்களாக ஆளரவமே இல்லை. ஆளைக் காணவில்லை என்று கூறப்பட்டதால், என்ன, ஏது என்று விசாரித்தேன். குடும்பத்தவர்களுடன் மலேசியா பக்கம் ஒதுங்கி விட்டார் என்று பேச்சு அடிபட்டது. உண்மை நிலை தெரியவில்லை.

தூண்டில் போட்டு விடயத்தை அறியும் நோக்கில் கட்சி உறுப்பினர் ஒருவருக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்து மெல்ல நோண்டத் தொடங்கினேன். அவர் என் மீது திரும்பிப் பாய்ந்தார். 'அந்தப் பதவிக்கு அவரை நிறுத்தியதில் உங்களுக்கும் முக்கிய பங்கு உண்டுதானே..!' – என்று என் மீது பாய்ந்தார் அந்த உறுப்பினர். கப்சிப் என்று அடங்கிப் போனேன் நான். வேறு என்ன செய்ய முடியும்...?

## இரண்டு சிறுவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

பிரதேசத்திலுள்ள பொல்வத்த ஆற்றில் மூழ்கியே இரண்டு சிறுவர்களும் பலியாகினர்.

உறவினர்களான 11, 14 வயதுடைய சிறுவர்களே இவ்வாறு உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் நேற்று தமது பெற்றோர்களுடன் ஆற்றில் நீராட வந்தபோது இந்த அனர்த்தத்தில் சிக்கினர்.

நீரில் மூழ்கி மீட்கப்பட்ட சிறுவர்கள், இமதுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் உயிரிழந்தனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யக்கலமுல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## குடும்பப் பெண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விழுந்துள்ளார். இந்நிலையில், அவரைத் தூக்கிக்கொண்டு அவரது வீட்டுக்குச் சென்றவேளை வீட்டின் வாசலில் அவர் உயிரிழந்துள்ளார்.

வட்டுக்கோட்டை – தொல்புரம் கிழக்கு, சுழிபுரம், சிவபூமியடி பகுதியைச் சேர்ந்த இராசேந்திரம் செல்வநிதி (வயது 49) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

மேற்படி பெண் அவரது அயல் வீட்டுக்காரருடன் பேசுவதில்லை. இந்நிலையில், நேற்று அவரது வீட்டில் இருந்து சுமார் 30 மீற்றர்கள் தூரத்தில் உள்ள அயல்வீட்டுக்குச் சென்று தண்ணீர் தருமாறு கேட்டு வாங்கி குடித்துவிட்டு தனது வீட்டுக்குச் செல்வதற்கு வெளியே வந்துள்ளார்.

அவ்வேளை அவர் வீதியில் மயங்கி விழுந்துள்ளார். உடனே அங்கிருந்தவர்கள் அவரைத் தூக்கி அவரது வீட்டுக்குக் கொண்டு செல்லும்போது அவர் உயிரிழந்துள்ளார். இது தொடர்பில் உயிரிழந்த பெண்ணின் கணவன் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

மேற்படி பெண்ணுக்கும் அவரது கணவருக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டு, கணவர் அவரைத் தாக்குவதாக அயலவர்கள் தெரிவிக்கின்றனர். இருப்பினும் தாயார் வழமையாகப் பாவிக்கும் மாத்திரைகளை விழுங்கி விட்டு அயல்வீட்டுக்குச் சென்றார் என்று அவரது மகள் தெரிவிக்கின்றார்.

இது கொலையா அல்லது இயற்கைச் சாவா என்ற விபரங்கள் வெளியாகவில்லை. வட்டுக்கோட்டை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலம், உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## யாழ்.பல்கலை முன்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தமிழர் தாயகம் மீதான திட்டமிட்ட தொல்லியல் ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகச் சமூகமாக அணிதிரள்வோம் என்று மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.



# மோ. சைக்கிள்கள் மோதுண்டு விபத்து; இளைஞர் சாவு; நான்கு பேர் படுகாயம்!

## திருமலை ரயில் நிலையம் அருகே சம்பவம்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை ரயில் நிலையத்துக்கு அருகிலுள்ள கிறிஸ்தவ ஆலயத்திற்கு முன்னால் நேற்று மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞரொருவர் உயிரிழந்துள்ளார் எனவும் நால்வர் காயமடைந்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இரு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது பின்புறமாக மூவர் ஒரு மோட்டார் சைக்கிளில் மது போதையில் வேகமாக வந்து மோதியமையினால் இவ்விபத்து இடம்பெற்றதாக ஆரம்ப கட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.



இவ்விபத்தில் திருகோணமலை – கோணேசபுரி ஆறாம் கட்டையைச்சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஏ.தேவானந் (39வயது) என்பவரே உயிரிழந்தார் எனவும் அவருடன் பயணித்த அதே பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய யூ.தனூஸன் காயம் அடந்துள்ளார் எனவும் தெரிய வருகின்றது.

அத்துடன் வேகமாக வந்த மற்றைய மோட்டார் சைக்கிள் பயணித்த – முறையே 21, 30, 39 வயதுடைய – மூவரும் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த நான்கு பேரும் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துத் தொடர்பில் திருகோணமலை தலைமையக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இந்திய நாடு எப்போதும் இலங்கையின் நண்பன்!

## பொதுப் பாதுகாப்பு அமைச்சரிடம் உறுதியளித்தார் இந்தியத் தூதுவர்

இந்தியா எப்போதும் இலங்கையின் நண்பனாக செயற்படும் என்று இலங்கைக்கான இந்தியத் தூதர் சந்தோஷ் ஜா, பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிடம் உறுதியளித்துள்ளார்.

இருவருக்கும் இடையில் பொது பாதுகாப்பு அமைச்சின் அலுவலகத்தில் விசேட சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்ட உறுதி மொழியை அளித்தார்.

இரு நாடுகளுக்கிடையிலான உறவுகளை வலுப்படுத்துதல் மற்றும் இலங்கை பொலிஸ் பயிற்சித் திட்டங்களுக்கு இந்தியாவின் ஆதரவைப் பெறுதல் உள்ளிட்ட இரு தரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல விடயங்கள் இங்கு கலந்துரையாடப்பட்டன.

இதன்போது இந்தியத் தூதர் சந்தோஷ் ஜா, இரு நாடுகளுக்குமிடையில் தற்போதுள்ள நட்புறவு, இந்தியா எப்போதும் இலங்கையின் நண்பனாக செயற்படும் என்று அமைச்சர் டிரான் அலஸிடம் தெரிவித்தார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சஜித்துக்கு ஓர் ஆலோசனை

சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் மொழிக் கொள்கைதான் நாட்டின் இன்றைய சீரழிவு நிலைக்குப் பிரதான காரணம்.

ஆட்சிக்கு வந்தால் 24 மணி நேரத்தில் தனிச் சிங்கள ஆட்சி மொழிச் சட்டத்தைக் கொண்டு வருவேன் என்று 1956 பொது தேர்தலில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா முன்வைத்த கோஷம் உடனடியாக அவரைப் பிரதமர் பதவியில் இருத்தியது. ஆனால், அதுவே இலங்கைத் தீவில் இனவாதப் போர் வெடித்து அடுத்த அரை நூற்றாண்டு காலம் நாடு சின்னாபின்னப்படப் பிரதான காரணமாயிற்று.

நாற்பது ஆண்டுகள் கழித்து, அவரது மகள் சந்திரிகா ஜனாதிபதியான பின்னர் கூட, அந்த மோசமான மொழிக் கொள்கையால் ஏற்பட்ட பாதிப்புகளைச் சரி செய்ய முடியவில்லை. தனது தந்தையாரின் அந்த மொழிக் கொள்கை நடவடிக்கைதான் இலங்கைத் தீவை இனரீதியாகப் பிரித்துக் கூறு போட்டு, கொடுரமான போர் முன்னெடுக்கப்படுவதற்கு அடிப்படையாயிற்று என்ற உண்மையைப் பின் நாள்களில் சந்திரிக்காவே பகிரங்கமாக விசனத்துடன் ஒப்புக்கொள்ள வேண்டியவரானார்.

இலங்கையில் மொழி விடயங்களை 'எடுத்தோம், கவிழ்த்தோம்' என்று ஒருதலைப் பட்சமாக முன்னெடுத்துச் செயல்படுத்தக் கூடாது; செயல்படுத்த முடியாது.

எனினும் மொழிக் கொள்கை குறித்து - அதுவும் நாட்டின் மாணவர்கள் கல்வி பயில்வதற்கான மொழிக் கொள்கை குறித்து - அதுவும் அவர்களின் தாய் மொழி அல்லாத ஒரு மொழியில் கல்வியை முதலாம் வகுப்பில் இருந்து கற்பதைக் கட்டாயமாக்கும் ஒரு திட்டம் குறித்து - எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ திடுதிப்பென அறிவித்திருக்கிறார்.

எதிர்காலத்தில் தங்களது ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆங்கில வழிக் கல்வியை கட்டாயமாக்கும் என அவர் வார இறுதியில் தெரிவித்திருக்கின்றார்.

தரம் ஒன்று முதல் பதின்மூன்று வரையிலான மாணவர்களுக்கு ஆங்கில வழிக் கல்வியை கட்டாயமாக்குவோம் என குருநாகலில் நடைபெற்ற இளைஞர் பேரணியில் கலந்து கொண்டு அவர் அறிவித்திருக்கின்றார்.

மேலும், "இளைஞர்களுக்கு சீனம், இந்தி, ஜப்பானியம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி அறிவியல் ஆகிய மொழிகளை இலவசமாகக் கற்பிப்போம்" என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

ஆங்கில வழிக் கல்வி முறை இருந்த நாட்டில்தான், 1956இல் தனிச் சிங்கள மொழிச் சட்டத்தையும் தொடர்ந்து சுயபாஷா முறைமையையும் கொண்டு வந்து செருகினார்கள். அதன் விளைவாக நாட்டில் இரத்த ஆறு ஓடியது.

அந்த யுத்தத்தை எதிர்கொள்ளவதைத் தவிர்ப்பதற்காக வெளிநாடுகளுக்குப் பறந்தவர்களும், புலம்பெயர்ந்தவர்களும் ஆங்கிலத்தில் அல்லது தாங்கள் தஞ்சம் புகுந்த நாடுகளின் பிரபல்ய மொழிகளில் தங்களின் சந்ததிகளின் கல்வியைத் தொடர வைத்துத் தங்களை ஸ்திரப்படுத்திக் கொண்டனர்.

பேரினவாதத்தைக் கிளப்பி, அதன் வழிமுறையாக தனிச் சிங்களச் சட்டத்தை முன்னிறுத்தி, அதன் மூலம் ஆட்சி அதிகாரத்தைப் பிடித்த பண்டாரநாயக்கா ஆங்கில மொழிக் கல்வியில் பயின்றவர். அவரின் மகள் சந்திரிகா கூட அதற்கு விதிவிலக்கு அல்லர். ஏன் இப்போது திரும்பவும் ஆங்கில மொழி மூலம் கல்வியை வலியுறுத்தும் சஜித் பிரேமதாஸ கூட ஆங்கில மொழி மூலக் கல்வியை துறந்தவர் அல்லர்.

ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகப் பேரினவாதத்தை கிளப்பும் எத்தனமாக தனிச் சிங்கள சட்டம், சுயபாஷா கல்வி என்றெல்லாம் ஆலாபரணம் பண்ணிய பேரினவாதத் தலைவர்கள் கூடத் தங்கள் பிள்ளைகளின் விடயத்தில் அதைப் பின்பற்றவில்லை.

'தனக்கு, தனக்கு என்றால் சுளகு படக்கு படக்கு என்றும் அடிக்குமாம்' என்பார்கள். அப்படித்தான் மொழிக் கொள்கை நடைமுறையாக்க விடயத்திலும் தென்னிலங்கைத் தலைவர்கள் நடந்து கொண்டார்கள்.

தாம் இழைத்த தவறு அவர்கள் நெஞ்சை இப்போது சுடுகின்றது. அதனால் மாற்றத்துக்கு - திருத்தத்துக்கு - அவர்கள் முயல்கின்றார்கள். இணங்குகின்றார்கள்.

நல்லது. ஆனால் அத்தகைய தீர்மானங்களும் நடைமுறையாக்கமும் ஒருதலைப் பட்ச முடிவாக இருக்கக் கூடாது.

தேசிய ரீதியிலான கலந்துரையாடல், ஆய்வுகள் மற்றும் பொது இணக்கப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் அவை அமைய வேண்டும்.

இந்த விடயத்தில் சஜித் பிரேமதாஸவுக்கு அவரது தந்தையார் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ அடிக்கடி குறிப்பிடும் மூன்று 'C' களை நினைவுபடுத்த விரும்புகிறோம். **Consultation, Compromise and Consensus** (கலந்தாலோசனை, கருத்திணக்கம், கருத்தொருமிப்பு). இந்த மூன்றின் அடிப்படையில்தான் இத்தகைய தீர்மானங்களை எடுப்பதும் நடைமுறைப்படுத்துவதும் இடம் பெற வேண்டும்.

# நான் 2047 ஆம் ஆண்டுக்கும் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறேன்

## பிரதமர் மோடி தெரிவிப்பு

“தான் ஏற்கெனவே 2047 ஆம் ஆண்டுக்கு திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றேன். இந்தியா அதிவேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கின்றது.”

– இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

டில்லியில் தனியார் ஊடகம் ஏற்பாடு செய்த நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய பிரதமர் மோடியிடம், “2029 மக்களவை தேர்தலுக்கும் இப்போதே தயாராகி விட்டீர்களா?” என்று கேட்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த பிரதமர், “நீங்கள் 2029 ஆம் ஆண்டிலேயே சிக்கிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் நான் ஏற்கெனவே 2047 ஆம் ஆண்டுக்கு திட்டமிட்டுக் கொண்டிருக்கிறேன்” என்று தெரிவித்தார்.

பிரதமர் மோடி தெரிவிக்கையில்,

“இன்று மிகப்பெரிய ஜனநாயக திருவிழாவைக் கொண்டாடுவதற்கான பணிகள் தொடங்கியுள்ளன. ஒட்டு மொத்த உலகமும் நிச்சயமற்ற நிலையை எதிர்கொண்டிருக்கும் இந்த



நேரத்தில், இந்தியா தொடர்ந்து அதிவேகமாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது என்பது மட்டும் உறுதி.

இன்று தேசத்தின் மனநிலை, உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாறுவதற்கான இந்தியாவின் முயற்சிகளை எதிர்நோக்கியிருக்கிறது. தேசத்தின் மனநிலை இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதுதான். இதுபோன்ற நிகழ்வுகளுக்கு நான் வரும்போதெல்லாம், நான் பல தலைப்புச் செய்திகளைத் தருவேன் என்ற எதிர்பார்ப்பு உங்களுக்கு இருக்கும். ஆனால் நான் ‘ஹெட்லைன்’களுக்காக வேலை செய்யவில்லை, எடுத்துக் கொண்ட பணிகளை முடிப்பதற்கான ‘டெட்லைன்’களுக்காக வேலை செய்கிறேன்.

2014 இற்கு முன்பு, வடகிழக்கு பகுதி எப்போதும் முன்னுரிமை பட்டியலில் கீழே இருந்தது. ஆனால் 2014 இற்கு பிறகு, எங்கள் அமைச்சர்கள் மற்றும் மூத்த அதிகாரிகள் அனைவரும் மாவட்ட அலுவலகங்கள் மட்டுமின்றி, பிராந்தியத்தின் உள்பகுதிகளிலும் சுற்றுப்பயணம் செய்ய வேண்டும் என்று முடிவு செய்தோம்.

நமது மத்திய அமைச்சர்கள் வடகிழக்கு பகுதிக்கு 680 முறை சென்றுள்ளனர். முந்தைய பிரதமர்கள் மேற்கொண்ட கூட்டுப் பயணங்களை விட, வடகிழக்கு பகுதிகளுக்கு நான் மட்டும் அதிக முறை சென்றுள்ளேன். நாங்கள் வடகிழக்கு குறித்த மனநிலையை மாற்றியிருக்கிறோம். இந்தியாவின் கடைசி கிராமங்கள் என்று அழைக்கப்பட்ட பகுதிகளை நாங்கள் மாற்றி, முதல் கிராமங்கள் என்று அழைக்க ஆரம்பித்துள்ளோம்” – என்றார்.

# தமிழக தேர்தல் களம் இம்முறை பா.ஜ.கவுக்கு சாதகமாக உள்ளது

## அண்ணாமலை கருத்து



“இந்த முறை தமிழக தேர்தல் களம் பா.ஜ.கவுக்கு சாதகமாக உள்ளது. சவால் இருப்பது உண்மைதான். அதையெல்லாம் எதிர்கொள்ள முடியும் என்கிற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.”

– இவ்வாறு பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், செய்தியாளர்களைச் சந்தித்த தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை,

“பா.ஜ.க. தேர்தலுக்கு தயாராக இருக்கிறது. தேர்தலுக்கு நாட்கள் குறைவாக உள்ளது. மனு தாக்கல் இவற்றையெல்லாம் கழித்து பார்த்தால் பிரச்சாரத்துக்கு 18 நாள்கள்தான் இருக்கிறது. எல்லா கட்சிக்கும் சமமான நாட்கள்தான் இது. இந்தத் தேர்தல் தமிழகத்தில் இருக்கும் அனைவருக்கும் சவாலான ஒன்று.

தமிழகத்தை பொறுத்தவரை எப்போதும் முதல் அல்லது இரண்டாம் கட்டங்களில் தேர்தல் நடந்துவிடும். எனவே, நாள்கள் குறைவு என்பதை விட அனைவருக்கும் இது சமம் என்று பார்க்க வேண்டும்.

பிரதமர் மோடியின் வருகையால் தமிழகத்தில் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. அடுத்து கோவை, சேலத்துக்கு பிரதமர் மோடி வருகிறார். இது இன்னும் அதிக உற்சாகத்தை எங்களுக்கு தரும்.

39 தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை முடிவு செய்யும்போது விளவங்கோடு தொகுதிக்கும் வேட்பாளர் முடிவு செய்யப்படுவார். கூட்டணி பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. சீக்கிரம் கூட்டணி இறுதி செய்யப்பட்டு அறிவிக்கப்படும். 39 தொகுதிகளுக்கும் சேர்த்துதான் வேட்பாளர்கள் அறிவிக்கப்படுவார்கள். கூட்டணி கட்சிகளைவிட்டு தனியாக தொகுதிகளை அறிவிப்பது மரியாதையாக இருக்காது.

இந்தியாவில் மற்ற மாநிலங்களை விட தமிழகத்தில் தேர்தல் செலவுகள் அதிகம் இருப்பதில் வருத்தம். சுயேட்சைகள் தமிழகத்தில் ஜெயிக்கவே முடியாது என்னும் அளவுக்கு இங்கு தேர்தல் செலவுகள் அதிகமாக உள்ளது. இம்முறை தமிழகத்தில் பணப்புழக்கத்தை கட்டுப்படுத்தும் என்று தேர்தல் ஆணையம் உறுதியளித்துள்ளது.

அப்படி செய்தால் மகிழ்ச்சி. ஒவ்வொரு தேர்தலுமே ஜனநாயகத்துக்கு வைக்கக்கூடிய பரீட்சை. தமிழகத்தில் மிகவேகமாக தேர்தல் நடத்தப்படுவது ஒருவகையில் தேர்தல் செலவுகளை கட்டுப்படுவதில் சாதகமான அம்சம்தான்.

இந்தமுறை தமிழக தேர்தல் களம் பா.ஜ.கவுக்கு சாதகமாக உள்ளது. சவால் இருப்பது உண்மைதான். அதையெல்லாம் எதிர்கொள்ள முடியும் என்கிற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.” – என்றார்.





# துருக்கி படகு விபத்து; 21 பேர் உயிரிழப்பு!

துருக்கி அருகே அகதிகள் படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குளானதில் 21 பேர் உயிரிழந்துள்ளனர்.

இது குறித்து அதிகாரிகள் தகவல் வெளியிடுகையில்,

ஏராளமான அகதிகளிடன் சென்று கொண்டிருந்த படகு துருக்கியின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள அய்ஜீயன் கடற்கரைக்கு அருகே கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. விபத்தில் 5 சிறுவர்கள் உட்பட 21 பேர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

கடலில் மூழ்கியபோது அந்தப் படகில் எத்தனை பேர் இருந்தனர் என்பது தெரியாத நிலையில், விபத்து இடம்பெற்ற பகுதியிலிருந்து 2 அகதிகளை துருக்கி கடலோரக் காவல் படையினர் உயிருடன் மீட்டுள்ளனர். மேலும் 2 பேர் நீந்திக் கரை சேர்ந்துள்ளனர்.

இந்த விபத்தில் சிக்கியவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற விவரம் தெரியவில்லை. விபத்துப் பகுதியில் 8 மீட்புப் படகுகள், ஒரு விமானம், 2 ஹெலிகொப்டர்கள், ட்ரோன் மூலம் தொடர்ந்து தேடுதல் பணிகள் நடைபெற்று வருகின்றன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# மலேசியாவில் சோதனை நடவடிக்கை; இலங்கையர்கள் உட்பட 158 பேர் கைது

மலேசியாவில் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் நடத்தப்பட்ட சோதனையின் போது இலங்கையர்கள் உட்பட 158 சட்டவிரோத குடியேற்றவாசிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என கூறப்படுகிறது.

இந்த நிலையில் கைது செய்யப்பட்டவர்களில் இலங்கையர்களும் அடங்கின்றனர் என அந்நாட்டு செய்தி நிறுவனமொன்று தெரிவித்துள்ளது.

ஆனாலும், அவர்கள் தொடர்பில் முழுமை விபரங்கள் ஏதும் இன்னும் வெளியாகவில்லை என தெரிவிக்கப்படுகிறது.



358 புலம்பெயர்ந்தவர்களில் 158 பேர் மலேசியாவில் செல்லுபடியாகும் விசாக்கள் இன்றி இருந்தமை கண்டறியப்பட்டதாக குடிவரவு இயக்குநர் மியோர் ஹிஸ்புல்லா மியோர் அப்த் மாலிக் குறிப்பிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களில் 83 ஆண்கள், 54 பெண்கள், 8 சிறுவர்கள் மற்றும் 3 சிறுமிகள் அடங்குகின்றனர். இவர்கள் இந்தோனேசியா, நேபாளம், மியான்மர், பங்களாதேஸ், சீனா, பாகிஸ்தான், இலங்கை மற்றும் வியட்நாமைச் சேர்ந்தவர்கள் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலையில், உரிய அங்கீகாரம் இன்றி வெளிநாட்டவர்களுக்கு தமது குடியிருப்புக்களை வாடகைக்கு விட வேண்டாம் என உள்ளூர் வீட்டு உரிமையாளர்களை குடிவரவு இயக்குநர் மியோர் ஹிஸ்புல்லா மியோர் எச்சரித்துள்ளார்.

# ரஷ்ய இராணுவத்தில் பணிபுரிந்த இந்திய வீரர் ஒருவர் உயிரிழப்பு

ரஷ்ய இராணுவத்தில் பணிபுரிந்த இந்திய வீரர் ஒருவர் ஏவுகணை தாக்குதலில் உயிரிழந்துள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

ரஷ்யாவில் அதிக சம்பளத்துடன் வேலை இருப்பதாக அழைத்து செல்லப்பட்டு இந்தியர்கள் சிலரை அந்த நாட்டு இராணுவத்தில் கட்டாயப்படுத்தி சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, குஜராத்தை சேர்ந்த ஹெமில் என்ற இந்தியர்,ரஷ்யா இராணுவத்தில் உதவியாளராக பணியாற்றி வந்துள்ளார்.



இந்த நிலையில், போரின் போது ஏவுகணை தாக்குதலில் ஹெமில் பலியாகி விட்டார் என அவரது குடும்பத்தினருக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, போரில் உயிரிழந்த ஹெமில் உடலை மீட்டு கொண்டு வர வேண்டும் என்று அவரது தந்தை அஸ்வின் இந்திய தூதரகத்துக்கு பல முறை மின்னஞ்சல் மூலமாக தகவல் அனுப்பியுள்ளார் என தெரியவந்துள்ளது.

அத்துடன், சமீபத்தில் ரஷ்யா இராணுவத்தில் பணிபுரிந்த ஐதராபாத்தை சேர்ந்த முகமது அஸ்பான் (வயது 30) போரில் பலியானார் என்பது குறிப்பிடத்தக்கது.



# சட்டவிரோதமாக மாடு வெட்டினாராம் முன்னாள் பொலிஸ் உத்தியோகஸ்தர்

## கைது செய்யப் பருத்தித்துறைப் பொலிஸார் நடவடிக்கை

சட்டவிரோதமான முறையில் இறைச்சிக்காக மாடு வெட்டிய குற்றச்சாட்டில் முன்னாள் பொலிஸ் உத்தியோகஸ்தரைக் கைது செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி புலோலிப் பகுதியில் வீடொன்றில் வைத்து சட்டவிரோதமான முறையில் மாடொன்று இறைச்சியாக்கப்படுகிறது என்று பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் அந்த வீட்டுக்குப் பொலிஸார் விரைந்துள்ளனர்.

பொலிஸாரைக் கண்டதும் மாட்டை இறைச்சியாக்கி கொண்டிருந்த நபர் வீட்டிலிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இதையடுத்து இறைச்சியை மீட்ட பொலிஸார் வீட்டின் உரிமையாளரான தப்பியோடியவரின் தாயாரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்தவரை விசாரணைகளின் பின்னர் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் முன்னிலைப்படுத்தினர்.

அவரை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை தப்பியோடிய நபர் முன்னாள் பொலிஸ் உத்தியோகஸ்தராக இருந்த நிலையில் பணியிடை நீக்கம் செய்யப்பட்டவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தானியங்களைக் கொள்வனவு செய்வதில் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்து!

பண்டிகை காலங்களில் தானிய வகைகளைக் கொள்வனவு செய்வதில் மிகவும் அவதானமாக இருக்குமாறு பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் பொது மக்களைக் கேட்டுள்ளது.

பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண இது தொடர்பில் தெரிவிக்கையில் –

பூச்சிகளால் தானியங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்கும் வகையில், சட்ட விரோத வியாபாரிகள் மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற இரசாயனங்களைச் சேர்க்கின்றனர்.

சந்தையில் காணப்படும் சந்தேகத்துக்கிடமான தானியங்கள் சுகாதார பரிசோதகருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் உள்ள நச்சு இரசாயனங்களை அடையாளம் காணும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, நச்சு இரசாயனங்கள் கலந்து விற்கப்படும் தானியங்கள் மற்றும் பிற பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதே நேரத்தில் சந்தையில் பொருத்தமற்ற தானிய வகைகளை அகற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.



# வெடுக்குநாறிமலையில் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக் கோரி திருகோணமலையில் கவனவீர்ப்பு

(ஏ.எச்.ஹஸ்பர், அப்துல்சலாம் யாசீம்)

வெடுக்குநாறி மலையில் இடம் பெற்ற சம்பவத்தின் போது கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யக் கோரியும் அதனை கண்டித்தும் திருகோணமலை சிவன்கோயிலடிக்கு முன்னால் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று மாலை இடம் பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தை சமூக செயற்பாட்டாளர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

கடந்த எட்டாம் திகதி சிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறி மலை சிவன் ஆலயத்தில் வழிபாட்டின் போது கைது செய்யப்பட்ட எண்மரை விடுதலை செய்யுங்கள் எனக் கவனவீர்ப்பில் ஈடுபட்டோர் வலியுறுத்தினர்.

‘வழிபாடு எமது அடிப்படை உரிமை’, ‘ஆதி சிவன் ஆலயம் எமது பூர்வீகம்’, ‘ஈழத்தின் சமய ஸ்தலங்களை அபகரிக்காதே!’, ‘தொல்பொருள் எனும் போர்வையில் பௌத்தத்தை விதைக்காதே!’, ‘வழிபாட்டை தடுக்கும் உரிமையைகாவல் துறையினருக்கு கொடுத்தது யார்?’, ‘ஆலய நிர்வாகிகளை உடனடியாக விடுதலை செய்!’, ‘ஆலயங்கள் சைவத் தமிழர்களின் பூர்வீக அடையாளம் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கவனவீர்ப் பில்வர்கள் ஈடுபட்டனர். இதில் சுமார் நூற்றுக்கும்அதிகமானவர்கள்கலந்துகொண்டனர்.








# திருமலையில் நேற்று ஊடக சந்திப்பும்

வவுனியா வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயதில் சிவராத்திரி பூஜை நேரத்தின்போது இடம்பெற்ற அடக்குமுறைக்கு எதிராகவும் அதன் போது கைது செய்யப்பட்ட எட்டு பேரையும் விடுவிக்குமாறு வலியுறுத்தி செய்தியாளர் சந்திப்பு ஒன்றும் திருகோணமலையில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

மத வழிபாட்டு இறைமையை வலியுறுத்தும் வகையில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஊடக சந்திப்பில் வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயதில் இடம்பெற்ற அத்துமீறலுக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இந்த செய்தியாளர் சந்திப்பில் திருகோணமலை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் இந்து சமயத் தலைவர்கள் பங்கேற்றனர்.



# 21 இந்திய மீனவருக்கும் 27 வரை விளக்கமறியல்!

எல்லை தாண்டி வந்து இலங்கைக் கடற்பரப்பினுள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்று கூறப்படும் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 21 மீனவர்கள் 2 படகுகளுடன் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து இலங்கை கடற்படையினரால் இந்த கைதுநடவடிக்கைமுன்னெடுக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட மீனவர்கள் நீரியல் வள திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

நீரியல்வள திணைக்களத்தினர் அவர்களுக்கு எதிராக ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

ஊற்காவற்றுறை நீதிமன்றின் நீதிவான் ஜே.கஜநிதபாலன் முன்னிலையில் மீனவர்கள் நேற்று முற்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரணை செய்த நீதிவான் சந்தேகநபர்களை எதிர்வரும் 27ம் திகிதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.



# எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தாலும் கூட நிச்சயமாக நான் அமைச்சராக இருப்பேன்!

## உறுதியாகக் கூறுகின்றார் திகாம்பரம் எம்.பி.

எந்தத் தேர்தல் வந்தாலும் மக்கள் நலன் கருதி உரிய நேரத்தில் தகுந்த தீர்மானத்தை எடுப்பேன். யார் ஆட்சிக்கு வந்தாலும் நாம் ஒதுங்கியிருக்க முடியாது. எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தாலும் நிச்சயமாக நான் அமைச்சராக இருப்பேன். – என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் மேதின விழா ஏற்பாடுகளை முன்னிட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை அட்டன் அஜந்தா விருந்தகத்தில் இடம்பெற்ற சங்கத்தின் முக்கியஸ்தர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிதிச் செயலாளர் சோ. ஸ்ரீதரன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் பொதுச் செயலாளர் எஸ். பிலிப், நிர்வாகச் செயலாளர் டாக்டர் ஏ. நந்தகுமார், தேசிய அமைப்பாளர் ஜி. நகுலேஸ்வரன், உபதலைவர்கள், உபசெயலாளர்கள், தோட்டக் கமிட்டித் தலைவர்கள், தலைவிகள், இளைஞர் அமைப்பின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டார்கள்.

அங்கு பழனி திகாம்பரம் மேலும் பேசுகையில் கூறியவை வருமாறு:–

இம்முறை தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் பொதுவான மேதின விழா இடம்பெறாது. எனவே, தொழிலாளர் தேசிய சங்கத்தின் தனித்துவமான மேதின விழாவை தலவாக்கொல்லை நகரில் நடத்தத் திட்டமிட்டுள்ளோம். தேர்தல் காலம் நெருங்குவதால் எமது நிலைப்பாடு எவ்வாறு இருக்கும் என அரசியல் கட்சிகள் எம்மோடு தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன. நாம் எமது மக்கள் நலன்கருதி சரியான நேரத்தில் சரியான முடிவை எடுப்போம். தேர்தல் வெற்றிக்கு மேதினம் எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும். யார் ஆட்சிக்கு வந்தாலும் நாம் ஒதுங்கியிருக்க முடியாது. எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தாலும் நிச்சயமாக நான் அமைச்சராக இருப்பேன்.

இப்போது எதிரணியில் இருந்தாலும் எனக்கு 85 ஆயிரத்துக்கும் மேலான வாக்குகளை அளித்த மக்களுக்கும், என் மீது நம்பிக்கை வைத்துள்ளவர்களுக்கும் சேவை செய்யக் கடமைப்பட்டுள்ளேன். அவர்களை ஏமாற்ற மாட்டேன். இப்போதுள்ள அரசாங்கத்தில் பதவிக்காக இணைந்திருந்தால், அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள நிதி இல்லாத நிலையில் மக்களின் வெறுப்புக்கு ஆளாகியிருப்பேன்.

தொழிலாளர்களுக்கு 30 நாள்களுக்கும் 1,700 ரூபா சம்பளம் கிடைத்தால் மகிழ்ச்சியடைவேன். அதேநேரம் ஊழியர் சேமலாப நிதியோடு ஒரு கிலோ கொழுந்துக்கு 100 ரூபா வீதம் கிடைத்தால் அதையும் வரவேற்கத் தயாராக இருக்கிறேன். தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளம் கிடைக்கவும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணவும் தொழிற்சங்க ஒற்றுமை அவசியமாகும்.

அரசியல் ரீதியில் யாரையும் இல்லாமல் செய்ய வேண்டும் என்ற எண்ணம் எனக்குக் கிடையாது. பழைய பாணியில் மக்கள் மத்தியில் மோதல்களை ஏற்படுத்தி, பழிவாங்கும் அரசியல் செய்யும் நோக்கமும் கிடையாது. எனது வயதுக்கும் அனுபவ முதிர்ச்சிக்கும் ஏற்ப, கடந்த கால சேவைகளையும், இளைஞர், யுவதிகளின் வேலை வாய்ப்பு முதலான எதிர்கால வேலைத் திட்டங்களையும் முன்வைத்து சரியான அரசியல் தெளிவை ஏற்படுத்தித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவேன்.

தொழிலாளர் தேசிய சங்கம் வாரிசு அரசியலை மேற்கொள்ளாது. ஜனநாயக ரீதியில் கட்சியைப் பொறுப்பேற்க யாராவது முன்வந்தால் அவர்களுக்கு விட்டுக் கொடுக்கவும் தயாராக இருக்கின்றேன். – என்றார்.



# வெடுக்குநாறிமலை விவகாரம் தொடர்பில் நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கவும் தயார்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரன் எம்.பி. தெரிவிப்பு

(கே.வசந்தன்)

வெடுக்குநாறிமலையில் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யக்கோரி நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரிக்குமாறு ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு கோரியுள்ளது. அதற்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னனி தயாராகவுள்ளது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலைக்கு நேற்றுச் சென்ற பின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழர்களுக்கு எதிராகப் புதிது புதிதாக சட்டங்கள் இயற்றப்பட்டு, அவர்கள் கைது செய்யப்படுகின்ற நிலைமையே காணப்படுகிறது. இதுவே வெடுக்குநாறி விடயத்திலும் நடந்தது. பொய்க் குற்றச்சாட்டுக்களைப் போட்டு அவர்களை இன்று சிறை வைத்திருக்கிறார்கள்.

இவர்கள் மீதான வழக்குகள் வாபஸ் பெறப்பட்டு விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாக உள்ளது. ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு என்கின்ற ஓர் அமைப்பு இந்த விடயத்தை ஒட்டி நாடாளுமன்றத்தைத் தமிழ்ப் பிரதிநிதிகள் பகிஷ்கரிக்க வேண்டும் என்கின்ற ஒரு




கோரிக்கையை முன் வைத்திருக்கிறார்கள்.

எமது கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தோடு கலந்துரையாடியதன் பிரகாரம் எமது கட்சி உறுப்பினர்களோடு கலந்துரையாடினோம். அதன் அடிப்படையில் அதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னனி பூரண ஆதரவை வழங்குவதாக ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பிடம் தெரிவித்து இருக்கின்றோம்.

இது தொடர்பில் ஆறு திருமுருகன் அவர்களோடும், அகத்தியர் அடிகளாருடனும் பேசி அந்த முடிவுக்கு நாங்கள் சம்மதம் தெரிவித்து இருக்கிறோம். எனினும் நியாயப்பாடுகள் இல்லாமல் பக்கச் சார்பாகச் செயற்படுகின்ற சபாநாயகருக்கு எதிராக 19ஆம், 20 ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் நம்பிக்கை இல்லாப் பிரேரணை விவாதத்துக்கு வருகின்றது. இருபதாம் தேதி வாக்கெடுப்பு இடம்பெற இருக்கின்றது.

ஆகவே, இந்த நாடாளுமன்ற அமர்வுக்குச் செல்லாமல் பகிஷ்கரித்தால் விவாதத்திலும் கலந்துகொள்ள முடியாமல் போகும். அங்கு எதிர்த்து வாக்களிக்க முடியாமல் போகும் நிலைமையும் உருவாகும். இது தொடர்பில் அழைப்பு விடுத்த ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டிய தேவை இருக்கிறது.

அதுக்கும் அப்பால் ஜனாதிபதியை பாதுகாப்பதற்கும், இலங்கையில் இன அழிப்பு இடம்பெற்றதனை மூடி மறைப்பதற்கும், இலங்கை பொருளாதார நிலைமையில் இருந்து காப்பாற்றுவதாக கூறி சர்வதேச நாணய விடயத்தில் அரசோடு ஒட்டியதுடன், அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை என தெரிவித்து இதற்கு முன்பிருந்து செயற்படும் அமைப்புக்கள் இன்று வெடுக்குநாறிமல்சியில் கைதானவர்கள் குறித்துப் பேச்சு நடத்துகிறது. அந்தச் சந்திப்பு – பேச்சு – அவர்களது விடுதலையை சாத்தியமாக்குமாக இருந்தால் அது தொடர்பாக நாங்கள் ஆட்சேபனை தெரிவிக்கப் போவதில்லை. இவர்களது விடுதலைக்கு யார் முயற்சி எடுத்தாலும் நாங்கள் அதற்கு தடையாக இருக்கப் போவதுமில்லை. – எனத் தெரிவித்தார்.

# காட்டு யானைகளின் தாக்குதலில் மட்டு. மாவட்டத்தில் இருவர் பலி!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் யானை தாக்கி இருவர் மரணமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்து வரும் யானையின் தாக்குதல்களால் விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்கள் பெரிதும் பாதிப்படைகின்றனர்.

ஏறாவூர் பற்று பிரதேச செயலகப்பிரிவு ஈரளக்குளத்தில் சனிக்கிழமை இரவும், கிரான் பிரதேச செயலக பிரிவு திகிலிவெட்டையில் ஞாயிறு அதிகாலையிலும் இச்சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

இரு வெவ்வேறு பிரதேச செயலகப்பிரி வுகளிலும் இடம்பெற்றமனித உயிரிழப்பு களுக்கான மரண விசாரணைகளை, திடீர் மரண விசாரணை அதிகாரிகளான எம்.எஸ்.எம்.நஸீர், கே.பவளகேசன் ஆகியோர் கரடியனாறு மற்றும் சந்தி வெளி பொலிஸாருடன் சம்பவ இடங்களுக்கு நேரடியாக சென்று மேற்கொண்டனர்.



ஆவெட்டியாவெளியில் மாடு வளர்ப்பில் ஈடுபட்ட, சித்தாண்டியை சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான பத்மநாதன் மோகனதாஸ் (45) என்பவர் சனிக்கிழமை மாலை உறவினர் ஒருவரின் வீட்டுக்கு சென்று, பண்ணையை நோக்கி இரவு 09 மணியளவில் நடந்து செல்லும்போது ஈரளக்குளத்தில் வீதியோரமாக நின்ற யானையின் தாக்குதலால் சம்பவ இடத்திலேயே மரணித்தார்.

திகிலிவெட்டை, குளத்துவெட்டையை சேர்ந்த நாகராசா முரளிதரன் (வயது 31)என்ற ஒரு பிள்ளையின் தந்தை நண்பர் ஒருவருடன் நள்ளிரவு வேளை வலைவீசி மீன் பிடிக்கச் சென்று ஞாயிறு அதிகாலை வேளை குளத்தின் ஓரமாக நின்ற மதுரை மரத்தின் கீழ் படுத்துறங்கிய போது யானையின் தாக்குதலுக்குள்ளாகி சம்பவ இடத்திலேயே மரணித்துள்ளார். இரு சடலங்களும் உடற்கூற்று பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை மற்றும் வாழைச் சேனை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, பிரேத பரிசோதனையின் பின்னர் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# இன்றைய ராசி பலன்கள் - 18.03.2024




சில செயல்களில் தாமதங்கள் காணப்படும். பதற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். ஆன்மீக ஈடுபாடு உங்களை அமைதிப் படுத்தும்.

உங்கள் முக்கியமான பணிகளை முடிக்க இயலாது. தாமதங்கள் ஏற்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்கத் திட்டமிட வேண்டியது அவசியம்.

இன்று நீங்கள் உங்கள் துணையை திருப்திபடுத்த இயலாது. உங்களால் முடிந்த அளவு இனிமையாகப் பேசி நிலைமையை சீராக்குங்கள்.

இன்று அதிர்ஷ்டம் குறைவான நாள். பணப்புழக்கம் காணப்பட்டாலும் தேவையற்ற செலவுகள் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படாது. தூக்கமின்மை காரணமாக இன்று ஆரோக்கியம் குன்றி காணப்படும்.




இன்று உங்களுக்கு மிகவும் அமைதியான நாளாக அமையும்.சௌகரியமான நாளாக அமையும்.திருப்தியுடன் காணப் படுவீர்கள்.நீங்கள்பெரிதாக எதையோ சாதித்தது போன்று உணர்வீர்கள்.

நீங்கள் உங்கள் பணியில் இன்று இரகசியத்தை காப்பீர்கள்.நீங்கள் பணியாற்றும் முறை உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

இன்று உங்கள் துணையுடன் இருப்பதை சொர்கத்தில் இருப்பது போல உணர்வீர்கள். இன்று மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

இன்று சேமிக்கும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்வீர்கள். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும். சுதந்திரமான நிதிநிலைமைக்கு வாய்ப்பு உள்ளது.




இன்று மகிழ்ச்சியாக இருப்பதற்கு உற்சாகமானதாக எதுவும் காணப் படாது. நீங்கள் குழப்பத்துடன் காணப் படுவீர்கள். நீங்கள் எடுத்த முடிவு தவறாக முடியும்.

பணியில் வளர்ச்சி குறைந்து காணப்படும்.பணிச்சுமை அதிகமாக இருக்கும். பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் உறவாடும் போது சில சிக்கல்கள் காணப்படும். இது இன்றைய நாளின் இனிமையை பாதிக்கும்.

இன்று நிதி வளர்ச்சிக்கு உகந்த நாள் அல்ல. உங்களிடம் இருக்கும் ஒவ்வொரு பணத்தையும் சேமிக்க வேண்டும்.

தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உருவாகலாம்.




இன்று மகிழ்ச்சி குறைந்து காணப்படும். குறைந்து காணப்படும் தன்னம்பிக்கையை அதிகரித்துக் கொள்ளுங்கள். சில புத்தி சாலித்தனமான திட்டமிடல் வெற்றியின் உச்சத்தை அடைய வழிகாட்டும்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணிகளை திட்டமிட்டு கவனமுடன் ஆற்றுவதன் மூலம் தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்ளாலாம்.

உறவில் நல்லிணக்கத்தைப் பராமரிக்க உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

எதிர்பாராத வகையில் பண இழப்பு ஏற்படலாம். செலவுகளை கட்டுபடுத்த வேண்டும். பணத்தைக் கவனமாகக் கையாள வேண்டும். தாயாரின் சிறிய உடல் நிலை பிரச்சினையால் பணம் செலவு செய்ய நேரலாம்.




இன்று திருப்தியான பலனை பெறுவதற்கு உங்கள் மனதை அமைதியாக வைத்திருக்க வேண்டியது அவசியம். உங்கள் தன்னம்பிக்கையை இழக் காதீர்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும்.எதிர்பார்ப்புடன் நன்மை தீமைகளை ஆலோசித்து அதன்படி பணியாற்றுவது நல்லது.

உங்கள் துணையைப் புரிந்து கொண்டு அவரின் விருப்பங்களை பூர்த்தி செய்ய வேண்டும்.

பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கையாள்வதில் கவனம் தேவை.

இன்று பதற்றத்துடன் காணப்படுவீர்கள். அதனால் தோள்களில் வலிகள் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.இன்று கூடுதல் பலன்கள்கிடைக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு இன்று திட்டமிடலாம்.

நீங்கள் ஆற்றும் பணியில் வளர்ச்சியைக் காண்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். கடமை உணரச்சி மற்றும் சேவை மனப்பான்மையுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஒரு விழா குறித்து உங்கள் துணையுடன் இனைந்து திட்டமிடுவீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படும். அதனை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள். இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். உங்களிடம் காணப்படும் நம்பிக்கை ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்திருக்கும்.




இன்று மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.இது உங்கள் செயலிலும் எண்ணத்திலும் வெளிப்படும்.தியானம் மேற்கொள்வதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

புதிய வேலைவாய்ப்புக்கான சாத்தியம் உள்ளது.இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணி செய்வதற்கான சாதகமான நிலை காணப்படும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக உங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பண வளர்ச்சி அதிகமாக காணப்படும். சேமிப்பு திட்டங்களில் சேர்வதன் மூலம் நீங்கள் உங்கள் பணத் தேவைகளை மேம்படுத்தலாம்.

உங்கள் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்




உங்கள் எதிர்மறை எண்ணத்தை வெளிப்படுத்துவீர்கள்.அதனை தவிர்ப்பது நல்லது. இல்லையெனில் முன்னேற்றம் காண்பது அரிது.யதார்த்தமான அணுகுமுறை தேவை.

உங்கள் பணியில் தவறுகள் நேரலாம்.இதற்கு உங்களின் கவனக் குறைவே காரணமாக இருக்கும். இதை நீங்கள் தவிர்ப்பது நல்லது. திறமையான முறையில் ஒழுங்கமைத்து பணியாற்றினால் வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையிடம் அன்பைக் கொடுத்து அன்பைப் பெறுதல் என்ற கருத்துடன் இன்று பழகுவது நல்லது. இதனால் மகிழ்ச்சி நிலவும்.

உங்கள் பொறுப்புகள் அதிகரித்து காணப்படும். இன்று இதனை தவிர்க்க முடியாது. முதுகு வலி மற்றும் செரிமானக் கோளாறு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 18.03.2024




உங்கள் மனதை இன்று தியானம் மேற்கொள்வதன் மூலம் ஓய்வாக வைத்துக் கொள்ள முடியும்.நீங்கள் எதையோ இழந்தது போல உணர்வீர்கள். பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் மனதில் காணப்படும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்ளுங்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாகக் காணப்படும். அதனால் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.உங்கள் பணிகளை ஒழுங்கமைத்து பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் உங்களின் ஈகோ உணர்வை வெளிபடுத்தாதீர்கள். நட்புடன் அணுகுங்கள்.

திடீர் செலவுகள் எதிர்கொள்ள நேரலாம். சேமிப்புக் கென்று சிறிது பணத்தை ஒதுக்குவதற்கு முயற்சி செய்வது நல்லது.

செரிமானக் கோளாறுகள் ஏற்படலாம்.




இன்று நீங்கள் மகிழ்ச்சியுடன்காணப் படுவீர்கள்.உங்கள் நலனை மேம்படுத் தும் பயனுள்ள முடிவுகளுக்கான திட்டங் களை மேற்கொள்வீர்கள். எந்தச் செயலாக இருந்தாலும் அதை எளிதில் செய்து முடிப்பீர்கள்.

பிறர் பார்த்து பின்பற்ற முடியாத பாணியில் பணியாற்றுவீர்கள். உங்களின் இந்த தனிப்பட்ட அணுகுமுறை உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெற்றுத் தரும்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். நீங்கள் ஒருவருக்காக மற்றவர் என்பது போல ஒருமித்த உணர்வுடன் காணப்படுவீர்கள். இன்று சுதந்திரமான நிதிநிலைமையுடன் காணப்படுவீர்கள். புதிய முதலீடுகள் செய்வதற்கு இது உகந்த நாள்.




இன்று மிகுந்த ஆற்றல் காணப்படும். வெற்றி பெற வேண்டும் என்ற உறுதி உங்களிடம் இருந்தால் இன்றை நாள் உங்களுக்கானது. சுய திட்டமிடல் மற்றும் புத்திசாலித்தனம் மூலம் உங்கள் தேவை களை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

பணிநிமித்தமான பயணங்களுக்கு வாய்ப்பு உள்ளது. வெற்றி பெறுவதற்கு கடின உழைப்பு தேவை.

நீங்கள் இருவரும் தகுந்த பொருத்தமுடையவர்கள். உங்கள் துணையிடம் நேர்மையுடன் நடந்து கொள்வீர்கள்.

எதிர்பாராத வகையில் பணம் வருவதற்கான வாய்ப்பு உள்ளது. பூர்வீகச் சொத்து கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று ஆற்றல் மிகுந்து காணப்படுவீர்கள். எனவே ஆரோக்கியத்தை நன்கு பராமரிப்பீர்கள்.




நீங்கள் விருந்துகள் மற்றும் ஆன் மீகச் சொற்பொழிவுகளில் கலந்து கொண்டு இன்றைய நாளை பயனுள் ளதாக ஆக்குவீர்கள். நீங்கள் மனதுக்கு ஆறுதல் அளிக்கும் பிரார்த்தனையில் ஈடுபடுவீர்ககள்.

பணியில் பதற்றம் காணப்படும். பணியிடத்தில் காணப்படும் சூழ்நிலையை அனுசரித்து நீங்கள் செயல்பட வேண்டும். அதற்கேற்றால் போல பணிகளை திட்டமிட வேண்டும்.

இன்று நீங்கள் பதற்றத்துடனும் உணர்ச்சி வசப்பட்டும் காணப்படுவீர்கள். இதனை தவிர்த்து உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்ள வேண்டும்.

பண இழப்புக்கான வாய்ப்புகள் உள்ளது. இன்று பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்ய வேண்டியது அவசியம்.




